# மீயுயர் நீதிமன்றங்களின் கட்டடத் தொகுதி முகாமை சபை

(1987 ஆம் ஆண்டின் 50 ஆம் இலக்க சட்டத்தினால் கூட்டிணைப்புச் செய்யப்பட்டது)

## பதவி வெற்றிடங்கள்

மீயுயர் நீதிமன்றங்களின் கட்டடத் தொகுதி முகாமை சபை அலுவலகத்தில் பின்வரும் பதவிக்கான வெற்றிடங்களைப் பூர்த்தி செய்வதற்காக கீழ்க் குறிப்பிடப்படுகின்ற தகைமைகளைக் கொண்ட இலங்கை பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

(1) **பாதுகாப்பு உதவியாளர் - வகுப்பு 111 – (பத்து வெற்றிடங்கள்)**

தகைமைகள்

வெளிவாரியான விண்ணப்பதாரிகள்

கல்வித்தகைமைகள்:

(அ) கல்விப் பொதுத் தராதர (சா/த) பரீட்சையில்

i. சிங்களம் / தமிழ்
ii. கணிதம்
iii. ஆங்கில மொழி

ஆகிய பாடங்கள் உட்பட நான்கு (04) பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஒரே தடவையில் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

(ஆ) கல்விப் பொதுத் தராதர (உ/த) பரீட்சையில் ஆகக் குறைந்தது மூன்று (பொது அறிவுப் பரீட்சை தவிர) பாடங்கள் சித்தியடைந்திருத்தல்.

(இ) பதவிக்கான பிரத்தியேக ஏனைய தகைமைகள்

i. மேலே ''அ'' பந்தி முதல் ''ஆ'' பந்தி வரை உள்ள தகைமைகள் அல்லது முப்படை அல்லது பொலிஸ் சேவையில் 05 வருட திருப்திகரமான சேவையைப் பூர்த்தி செய்திருத்தல் அல்லது அரச/தனியார் நிறுவனம் ஒன்றில் 05 வருட சேவையைப் பூர்த்தி செய்திருத்தல்.

ii. உடல் தகைமை ஆண்: - உயரம் 5' 2'' மார்பு 32''

பெண்: - உயரம் 5'

**உள்ளக விண்ணப்பதாரிகள்:**

(அ) ஆரம்ப – மட்டம் - திறன் சாராத மற்றும் திறன் சார் சேவைப் பிரிவில் கீழே ''ஆ'', ''இ'' மற்றும் ''ஈ'' பந்திகளில் குறிப்பிடப்பட்ட தகைமைகளையுடைய ஊழியர்கள் இப்பதவிக்கு விண்ணப்பிக்க முடியும்.

(ஆ) கல்விப் பொதுத் தராதர (சா/த) பரீட்சையில்

i. சிங்களம் / தமிழ்
ii. கணிதம்
iii. ஆங்கில மொழி

ஆகிய பாடங்கள் உட்பட நான்கு (04) பாடங்களில் திறமைச் சித்தியுடன் (B) ஒரே தடவையில் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

(இ) சேவையில் நிரந்தர நியமனம் பெற்றிருக்க வேண்டும் என்பதோடு அந்நியமனத்தில் சேவை உறுதிப்படுத்தப்பட்டிருக்க வேண்டும்.

(ஈ) விண்ணப்ப முடிவுத் திகதியில் நிரந்தர நியமனம் ஒன்றில் ஆகக் குறைந்தது 05 வருடங்கள் தொடராக திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருக்க வேண்டும்.

**வயது**: விண்ணப்பதாரி 18 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்வாரியான விண்ணப்பதாரிகளுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதாமாட்டாது.

**சம்பள அளவுத்திட்டம்**: ரூ.27,910-10x300-7x350-12x600-12x710-49,080/-

(மேலே சொல்லப்பட்ட சம்பளத்துக்கு மேலதிகமாக அரசாங்கத்தினால் அனுமதிக்கப்பட்ட ஏனைய கொடுப்பனவுகள் வழங்கப்படும்)

<u>பொது நிபந்தனைகள்</u>

(அ) ஒவ்வொரு விண்ணப்பதாரியும்

I. இலங்கை பிரசையாக இருக்க வேண்டும்.

II. பதவிக்கான கடமைகளைப் புரிவதற்கான உடல் ரீதியான மற்றும் உள ரீதியான தகைமையைக் கொண்டிருக்க வேண்டும்.

III. சிறந்த நன்னடத்தையுடையவராக இருத்தல் வேண்டும்.

(ஆ) சகல பதவிகளும் நிரந்தரமானதாகும் என்பதோடு ஓய்வூதியத்துக்கு உரித்தற்றதாகும்.

(இ) சகல விண்ணப்பதாரிகளும் ஒரு எழுத்து மூல/ நடைமுறை சோதனை அல்லது ஒரு கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கு பின்னர் தெரிவு செய்யப்படுவர்.

(ஈ) **ஊழியர் சேமலாப நிதியம்**: ஊழியர் சேமலாப நிதியத்துக்கு ஊழியரின் அடிப்படைச் சம்பளத்தின் 10% சதவீதம் பங்களிப்புச் செலுத்துகின்ற அதேநேரம் தொழில் தருனரினால் ஊழியர் சேமலாப நிதியத்துக்கு 12% சதவீதமும் ஊழியர் நம்பிக்கை நிதியத்துக்கு 3% சதவீதமும் பங்களிப்புச் செய்யப்படும்.

(உ) தெரிவு செய்யப்படுகின்ற விண்ணப்பதாரி மருத்துவ/ திடீர் விபத்துக் காப்புறுதி திட்டத்துக்கும் உரித்துடையவராவார்.

(ஊ) மேலே சொல்லப்பட்ட தகைமைகள் மற்றும் பதவியுடன் தொடர்புடைய அனுபவங்கள் தொடர்பிலான சான்றிதழ்களின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதிகளை விண்ணப்பத்துடன் இணைக்க வேண்டும். (அவ்வாறு சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும் என்பதை கவனத்தில் கொள்ளவும்.

மேலே குறிப்பிடப்பட்ட விபரங்களைக் உள்ளடங்கிய உறவினர் அல்லாத இரண்டு நடுவர்களின் பெயர்கள் முகவரிகள் தொடர்பு இலக்கங்களையும் குறிப்பிட் முழுமையான சுயவிபரத்தை உள்ளடக்கிய விண்ணப்பத்தை **2024.02.05** அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக கீழே குறிப்பிடப்படுகின்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்பட வேண்டும். விண்ணப்பிக்கின்ற பதவியின் பெயரை விண்ணப்பம் அடங்கிய கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிடவும்.

மார்ஷல்,
மீயுயர் நீதிமன்றங்களின் கட்டடத் தொகுதி
த.பெ.இல:223,
கொழும்பு 12